**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.78** **நாள் : 26.03.2020**

**பெருநகர சென்னை மாநகராட்சி அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்து கொரோனா வைரஸ் நோய்த்தொற்று தடுப்பு நடவடிக்கைகளுக்காக கிருமி நாசினி தெளிக்கும் ட்ரோன் இயந்திரங்கள் இன்று சோதனை செய்யப்பட்டது.**

பெருநகர சென்னை மாநகராட்சி அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்து கொரோனா வைரஸ் நோய்த்தொற்று தடுப்பு நடவடிக்கைகளுக்காக கிருமி நாசினி தெளிக்கும் ட்ரோன் இயந்திரங்கள் ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (26.03.2020) ரிப்பன் மாளிகை வளாகத்தில் சோதனை செய்யப்பட்டது.

**பின்னர் செய்தியாளர்களிடம் ஆணையாளர் அவர்கள் தெரிவித்ததாவது** :

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவுவதை தடுக்கும் வகையில் 200 வார்டுகளிலும் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் கிருமி நாசினிகளை தெளிக்க பவர் ஸ்பிரேயர் உட்பட 500 நவீன இயந்திரங்கள், அவற்றை இயக்குவதற்கான பணியாளர்கள் அந்தந்த வார்டுகளில் பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் அரசு அலுவலகங்கள் உட்பட பெரிய கட்டிடங்களில் அதிக சக்தியுடன் கூடிய 75 ஜெட்ராடிங் இயந்திரங்கள் மூலம் கிருமி நாசினிகள் தெளிக்கப்பட்டு வருகின்றன.

சுகாதாரத் துறையின் அறிவுரையின்படி வெளிநாடுகளிலிருந்து சென்னைக்கு திரும்பிய நபர்கள் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களின் இல்லங்களில் எச்சரிக்கை ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டுள்ளன. இந்த நபர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் மாநகராட்சி, காவல்துறை மற்றும் வருவாய்துறை அலுவலர்களால் வழங்கப்பட்டு அவர்கள் தொடர் கண்காணிப்பில் உள்ளனர்.

அதேபோன்று, தொடர் வண்டிகள் நிறுத்தப்பட்டதன் காரணமாக சென்னை சென்ட்ரல் மற்றும் எழும்பூர் இரயில் நிலையங்களில் வெளியூர் செல்ல வேண்டியிருந்த பயணிகள் மாநகராட்சியின் சமுதாயக் கூடங்களில் தங்க வைக்கப்பட்டு உணவு மற்றும் மருத்துவ பரிசோதனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக 144 தடை உத்தரவு அமலில் உள்ள நிலையில் அத்தியாவசிய தேவைகளுக்காக பொதுமக்கள் வந்து செல்லக்கூடிய பேருந்து நிலையங்கள், மார்க்கெட் பகுதிகள் மற்றும் மக்கள் அடர்த்தியாக உள்ள குடிசை பகுதிகளில் கிருமி நாசினி தெளிக்க ட்ரோன் இயந்திரங்களை பயன்படுத்த முடிவு செய்யப்பட்டு அதன்படி, சென்னை அண்ணா பல்கலைகழகத்தால் உருவாக்கப்பட்டுள்ள ட்ரோன் இயந்திரங்களை கொண்டு கிருமி நாசினி தெளிக்கும் பணிகள் இன்று சோதனை செய்யப்பட்டது. ஒரு ட்ரோன் இயந்திரத்தின் மூலம் ஒரு நாளைக்கு 50,000 ச.அ. பரப்பளவிற்கு கிருமி நாசினிகளை தெளிக்க இயலும். இதுபோன்று அண்ணா பல்கலைக்கழகத்திடம் 4 ட்ரோன் இயந்திரங்கள் உள்ளன என ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., துணை ஆணையாளர் (பணிகள்) திரு.பி.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., தலைமைப் பொறியாளர்கள், மாநகர மருத்துவ அலுவலர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**